# Telephone Conversation between PM and President of the Republic of South Africa

April 17, 2020

## பிரதம மந்திரி மற்றும் தென் ஆப்பிரிக்கா குடியரசின் ஜனாதிபதி இடையிலான தொலைபேசி உரையாடல்

ஏப்ரல் 17,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி தென் ஆப்பிரிக்கா குடியரசின் ஜனாதிபதி மேன்மை பொருந்திய சிரில் ரமபோசா உடன் இன்று தொலைபேசியில் உரையாடினார்.

Covid-19 தொற்றுநோயால் முன் வைக்கப்பட்ட உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்கள் குறித்து இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். தங்கள் மக்களின் ஆரோக்கியத்தை பாகாப்பதற்கும் பொருளாதார பாதிப்புகளைக் குறைப்பதற்கும் அந்ததந்த அரசாங்கங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

இந்த சவாலான நேரத்தில் அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கு உறுதி செய்வதற்கு தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று பிரதம மந்திரி உறுதியளித்தார்.

தொற்றுநோய்க்கு கண்டம் முழுவதும் பரவலான பதிலை ஒருங்கிணைத்தற்காக, ஆப்பிரிக்க ஒன்றியத்தின் தலைவராக ஜனாதிபதி ரமபோசா தனது தற்போதைய திறனில், ஆற்றிய பங்கைப் பிரதம மந்திரி பாராட்டினார்.

இந்தியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையிலான பல நூற்றாண்டு கால நட்புறவு மற்றும் மக்களிடமிருந்து மக்கள் பரிமாற்றங்களைத் தூண்டிய பிரதம மந்திரி, வைரஸுக்கு எதிரான கூட்டு ஆப்பிரிக்க முயற்சிக்கு இந்தியாவின் முழு ஆதரவையும் தெரிவித்தார்.

**நியூ டெல்லி**
**ஏப்ரல் 17, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.